**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM**

**Case No. 17/2021**

**Prosecution Witness – Pw1**

| | | |
|---|---|---|
| **Name** | : | **செந்தில் வேலவன்** |
| **Father Name** | : | **ராமசாமி** |
| **Address** | : | **3/30, VKV நகர், NGO colony, Coimbatore.** |
| **Calling** | : | **வழக்கறிஞர்** |
| **Age** | : | **63/2026** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 06.05.2026.**

**Signature of witness,**

(A4 to A6 are Present. A3, A10 are absent petition filed U/s.355 of BNSS personal appearance is dispensed with)

**CC.No. 17/2021 PW1: (LW –1 ) 06.05.2026**

**முதல் விசாரணை**

நான் தற்போது கோயம்பத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் 2012ல் விழுப்புரம் இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையராக பணிபுரிந்தேன். 21.07.2013ல் இந்து தினசரி ஆங்கில நாளிதழில் வெளியான Article ஐ சென்னை ஆணையர் திரு. தனபால் அவர்கள் படித்துவிட்டு நான் இணை ஆணையர் என்பதால் என்னிடம் தொலைபேசியில் தொடர்ப்பு கொண்டு மேற்கண்ட Article *என்னை படிக்க சொன்னார். அந்த Article ல் விருத்தாச்சலம் விருதகிரிஸ்வரர் ஆலயத்தில்* கோஸ்டத்தில் வடக்கு பார்த்து அமைந்திருந்த அர்த்தநாரீஸ்வரர் சிலை ஆஸ்திரேலியா அரும்பெரும்காட்சியத்தில் உள்ளதாக தெரிவிக்க பட்டிருந்தது. அதற்கு ஆதாரமாக பாண்டிச்சேரி பிரெஞ்ச் இன்ஸ்டியூட் பராமரித்த புத்தகத்தில் அந்த புகைப்படங்கள் வெளியிடப்பட்டிருந்தது. மேற்கண்ட Article

*வெளியிடப்பட்டிருந்த* அர்த்தநாரீஸ்வரர் சிலையானது விருதாச்சலம் விருதகிரிஸ்வரர் ஆலயத்தில் இருந்த அர்த்தநாரீஸ்வரர் சிலை என தெரியவந்தது. அதற்கு பிறகு மேற்கண்ட ஆலயத்தின் செயல் அலுவலரை நான் தொலைபேசியில் தொடர்பு கொண்டு மேற்கண்ட செய்தி குறித்து விசாரிக்க சொன்னேன். செயல் அலுவலர் விசாரித்து விட்டு 23.07.2013 அன்று எனக்கு அறிக்கை சமர்பித்தார். அந்த அறிக்கையில் விருதகிரிஸ்வரர் ஆலயத்தில் வடக்கு பார்த்து கோஸ்டத்தில் அர்த்தநாரீஸ்வரர் சிலை அதன் இரண்டு கைகள் பின்னமாகியிருந்ததால் கோவில் சிலை பின்னமாகி இருக்ககூடாது என்ற சாஸ்திர விதிபடி 2002 குடமுழுக்கின் போது அந்த சிலை அகற்ற பட்டு கோயிலின் தென்கிழக்கு மூலையில் அரசமரத்திற்கு அடியில் அந்த சிலை வைக்கப்பட்டிருந்ததாகவும் அதற்கு பிறகு அந்த கோயிலின் குருக்கள் அந்த சிலையை கவனிக்கவில்லை என்றும் அதற்கு பதிலாக அந்த குருக்கள் உபயதாரர் K.K.G. ஆனந்த் என்பவரை அணுகி புதிய சிலையை செய்து தர கோரியதாகவும் அதன் படி கண்ணன் என்ற மகாபலிபுரம் ஸ்தபதி மூலமாக புதிய சிலை செய்து பழைய கோஸ்டத்தில் பொருத்திவிட்டதாகவும் செயல் அலுவலர் தெரிவித்ததின் பேரில் பிறகு நான் கோயிலுக்கு சென்று சண்முக சுந்தரம் குருக்கள் உட்பட்டவர்களை விசாரணை செய்து சுவாமி சிலை ஏற்கெனவே இருந்ததையும் பின் அகற்றபட்டதையும் உறுதி செய்துகொண்டேன். மேற்கண்ட ஆலயத்தின் சொத்து பதிவேட்டை பார்வையிட்டேன். அதன்பிறகு 31.07.2013 அன்று விருதாச்சலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் காவல் நிலையத்தில் நான் கொடுத்த புகார் ஆகும். மேற்கண்ட புகார் அரசு தரப்பு ஆவணம் –1 ஆகும். பிறகு 2014ல் காவல் துறை கண்காணிப்பாளர், மதுரை அவர்கள் என்னை விசாரித்தார்கள். சிலைகள் கிடைக்கப்பெற்றதாகவும் அதனை பார்வை இட்டு அடையாளம் காட்டவேண்டும் என்று காவல் துறை கண்காணிப்பாளர் என்னை கேட்டுக்கொண்டார். 15.09.2014ல் தலைமை செயல் அலுவலகம் சென்னையில் உள்ள ASI அலுவலகத்தில் நானும் என்னுடம் வந்த பிச்சப்பா குருக்களும் செயல்

அலுவலர் கிருஷ்ண குமார் ஆகியோருடன் சென்று பார்வையிட்டு சிலையை அடையாளம் காட்டினோம். என்னிடம் காட்டப்படும் சிடியுடன் கூடிய சிலை தான் மேற்கண்ட அர்த்தநாரீஸ்வரர் சிலை ஆகும். மேற்கண்ட புகைப்படங்கள் வரிசை எண்ணிக்கை –4 , குறுந்தகடுடன் அ.சா.ஆ.2 ஆகும். கற்றறிந்த எதிர்தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனை செய்ததின் பேரில் ஆட்சேபனையுடன் அ.சா.ஆ. 2 குறியீடு செய்யப்படுகிறது. மேற்கண்ட சிலையானது கோயில் வசம் ஒப்படைக்கப்பட்டதாக தெரிந்து கொண்டேன். நான் புகார் கொடுத்த பிறகு மேலும் 6 சிலைகள் காணாமல் போனதாக தெரியவந்தது . சொத்து பதிவேட்டில் அந்த சிலைகள் குறித்து குறிப்பிடப்படாததால் புகாரில் அது குறித்து குறிப்பிடவில்லை. காவல் துறை என்னை விசாரித்தார்கள்.

<u>**4ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**</u>

நான் விழுப்புரம் இந்து சமய அறநிலையதுறையின் இணை ஆணையராக பொறுப்பேற்ற பிறகு இந்த புகார் கொடுத்தபிறகு தான் விருதகிரிஸ்வரர் ஆலயத்திற்கு முதன் முதலாக சென்றேன் என்றால் புகார் கொடுப்பதற்கு முன்பு சிலை காணாமல் போனது குறித்து விசாரணை செய்ய சென்றேன். அதற்கு முன்பு மேற்கண்ட ஆலயத்திற்கு சென்றேனா என்று ஞாபகம் இல்லை. இந்து நாளிதழில் கட்டுரை தொடர்பாக எனக்கு யார் தெரியபடுத்தியது என்றால் சென்னை இந்து சமய அறநிலையதுறை ஆணையர் திரு. தனபால் தொலைபேசியில் தெரிவித்தார். ஆணையர் என்னிடம் தகவல் தெரிவித்தபிறகு அவருக்கு ஏதாவது மேற்கண்ட செய்தி சம்பந்தமாக அறிக்கை சமர்பித்தேனா என்றால் புகார் கொடுப்பதற்கு முன்பாக சமர்ப்பித்தேன். ஆணையர் என்னை தொடர்பு கொண்டு தெரிவித்த செய்திதாள் கட்டுரை தொடர்பாக செயல் அலுவலரை தொடர்பு கொண்டு அவருக்கு தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். எனது தகவலின் பேரில் விருதகிரிஸ்வரர் ஆலய செயல் அலுவலர் கோயிலுக்கு சென்று பார்வையிட்டு

எனக்கு அறிக்கை சமர்ப்பித்தார் என்றால் சரிதான். செயல் அலுவலர் கொடுத்த அறிக்கையை ஆணையருக்கு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். மேற்கண்ட அறிக்கையை ஆணையர் படித்து விட்டு ஆணையர் உடனே என்னை புகார் கொடுக்கசொன்னாரா என்றாரா என்றால் ஆமாம். காவல் துறையில் நான் புகார் கொடுக்கும்போது என்ன ஆவணங்களை கொடுத்தேன் என்றால் புகார் மட்டும் கொடுத்தேன். அதன் பிறகு காவல் துறை என்னை விசாரிக்கும்போது நான் ஆவணங்கள் ஏதாவது கொடுத்தேனா என்றால் இல்லை. செயல் அலுவலர் தான் ஆவணங்களை காவல் துறையினரிடம் கொடுத்தார். காவல் துறையினர் என்னை விசாரிக்கும் போது ஏதாவது ஆவணங்களை காட்டி விசாரித்தார்களா என்றால் புகைப்படங்களை காட்டி விசாரித்தார்கள். நான் பொறுப்பேற்ற பிறகு எனது அலுவலக ஆவணங்களில் விருதகிரிஸ்வரர் ஆலயத்திற்கு கடைசியாக எப்போது குடமுழுக்கு நடந்தது என்று பார்த்து தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. மேற்கண்ட கோயிலுக்கான தல வரலாறு புத்தகம் உள்ளதா என்றால் எனக்கு தெரியவில்லை செயல் அலுவலருக்கு தான் தெரியும். காவல் துறையில் நான் கொடுத்த புகாரில் உள்ள சங்கதிகள் அனைத்தும் நான் கேட்டு தெரிந்துகொண்ட சங்கதிகள் என்றால் சரிதான். ஆலயத்தில் சொத்து பதிவேடு பராமரிக்கும் பொறுப்பு யாருடையது என்றால் செயல் அலுவலருடையது. ஆலயத்தின் சொத்து பதிவேட்டில் ஆலயத்தின் புராதன பொருட்கள் அனைத்தும் பதிவு செய்யபடவேண்டும் என்றால் சரிதான். புகாரின் பேரில் விசாரணைக்காக கோயிலுக்கு நான் சென்ற போது சொத்து பதிவேட்டை நான் பார்த்தேனா என்றால் நான் பார்த்தேன். களவு போனதாக சொல்லப்படும் பொருட்கள் பற்றிய விபரம் இருந்ததா என்றால் அர்த்தநாரீஸ்வரர் சிலையை தவிர மற்றவை குறித்து பதிவுகள் இல்லை. செயல் அலுவலர் பராமரிக்கும் ஆலய சொத்து பதிவேட்டை கண்காணிக்கும் பொறுப்பு என்னுடையது என்றால் சரிதான். மேற்கண்ட கோயிலுக்கு செயல் அலுவலர் பொறுப்பேற்றது நான் பொறுப்பேற்றதற்கு முன்பா அல்லது பின்பா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் சொத்து பதிவேட்டை

பார்க்கும்போது அதில் குறிப்பிடப்பட்டிருந்த சிலைகள் மற்றும் புராதன பொருட்கள் அனைத்தும் கோயிலில் இருந்ததா என்றால் நான் அர்த்தநாரீஸ்வரர் சிலை உள்ளதா என்பதை மட்டுமே பார்த்தேன். மற்றவை குறித்து நான் சரிபார்க்கவில்லை. சொத்து பதிவேட்டில் உள்ள பொருட்கள் புராதன பொருட்கள் என்பது குறித்த ASI வழங்கிய சான்றை நான் பார்த்தேனா என்றால் இல்லை. புகார் தொடர்பான அர்த்தநாரீஸ்வரர் சிலை குறித்து மட்டுமே நான் பார்த்தேன். நான் விருத்தகிரிஸ்வரர் ஆலயத்திற்கு சென்று பார்த்தபோது வடக்கு கோஸ்டத்தில் அர்த்தநாரீஸ்வரர் சிலை இருந்தது என்றால் புதிய சிலை இருந்தது. அந்த சிலையானது எப்போது நிறுவப்பட்டது என்பது குறித்த ஆவணங்கள் எதுவும் இருந்ததா என்றால் இல்லை, குருக்கள் சொன்னதின் பேரில் தெரிந்துகொண்டேன். சிதிலமடைந்த சிலைகள் பற்றிய விபரங்கள் சொத்துபதிவேட்டில் குறிப்பிடப்படவேண்டும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் .அ.சா.ஆ.1 ஆவணத்தில் மேற்படி திருக்கோவிலில் பல்வேறு காலங்களில் பணியாற்றிய செயல் அலுவலர்கள் விபரம் மற்றும் பணிக்காலம் ஆகியவை ஆவணங்களின் அடிப்படையில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் விருத்தகிரிஸ்வரர் ஆலயத்தில் 2002 குடமுழுக்கின்போதும் அதற்கு பிறகும் சன்னதி முறைப்பார்த்த அர்ச்சகர்கள் விபரம் ஆவணத்தின் அடிப்படையில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட புகாரில் காவலர்கள் பணியாற்றிய விபரம் என்பது ஆவணத்தின் அடிப்படையில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட புகாரில் குடமுழுக்கிற்காக நியமிக்கப்பட்ட திருப்பணிக்குழு என்று குறிப்பிடபட்டிருப்பது ஆவணத்தின் அடிப்படையிலா என்றால் செயல் அலுவலர் தெரிவித்ததின் பேரில் குறிப்பிட்டுள்ளேன். குடமுழுக்கிற்கான திருப்பணிக்குழுவில் இடம்பெற்ற நபர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மத்திய அமைச்சர், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், நகர முக்கிய பிரமுகர்கள் ஆகியோர் என்றால் சரிதான்.

ஆணையர் கொடுத்த தகவலின் பேரில் நான் விசாரணை மேற்கொண்ட போது நான் திருப்பணிக்குழுவில் இடம்பெற்ற மேற்கண்ட நபர்களை நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். திருப்பணிக்குழு தொடர்பாக செயல் அலுவலர் கொடுத்த தகவலை நான் சரிபார்க்கவில்லை என்றால் சரிதான். இந்த சிலையை அறநிலையதுறை அனுமதியின்றி கோஸ்டத்திலிருந்து அகற்றி பாதுகாப்பு இல்லாமல் வெட்டவெளியில் வைத்து களவுபோக காரணமாக இருந்தது அப்போதைய செயல் அலுவலர், தக்கார் / உதவி ஆணையர் , அர்ச்சகர்கள் மற்றும் திருப்பணிக்குழுவினர் ஆவர் என்று புகாரில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்கண்ட நபர்கள் மீது துறை ரீதியாக நான் நடவடிக்கை எடுத்தேனா என்றால் ஆணையர்தான் நடவடிக்கை எடுக்க முடியும் என்பதால் நடவடிக்கை எடுக்குமமாறு நான் ஆணையருக்கு பரிந்துரை செய்தேன். நான் செய்த பரிந்துரையின் மீது என்ன மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்கண்ட பரிந்துரை தொடர்பாக ஆணையர் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட சிலை காணாமல் போனது குறித்து ஆணையர் எனக்கு தொலைபேசி வாயிலாக தகவல் தெரிவித்தார் என்றும் அதன் பேரில் நான் செயல் அலுவலருக்கு தகவல் தெரிவித்தேன் என்று செயல் அலுவலர் எனக்கு அறிக்கை சமர்பித்தார் என்றும் அவருடைய அறிக்கையையும் மற்றும் என்னுடைய அறிக்கையை யும் ஆணையருக்கு சமர்பித்தேன் என்றும் நான் கொடுத்த புகாரில் குறிப்பிட்டிருந்தேனா என்றால் குறிப்பிட்டிருந்தேன். நான் கொடுத்த புகார் யாரால் எங்கு தயார் செய்யப்பட்டது என்றால் நான் தான் தயார் செய்தேன். நான் கொடுத்த புகாரின் நகல்கள் உயர் அதிகாரிகளுக்கு அனுப்பபட்டதா என்றால் நான் அனுப்பினேன். யார்யாருக்கு புகாரின் நகலை அனுப்பினேன் என்றால் ஆணையருக்கு அனுப்பினேன். அது குறித்து புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனால் தனியாக அலுவலக கடிதம் வைத்து புகாரின் நகலை ஆணையருக்கு அனுப்பினேன். மேற்கண்ட புகாரின் ஒவ்வொரு பக்கத்தின்

கடைசியிலும் C:/Documents and settings/koil/My Documents/ Arthanareeswarar theft 1. Docx என எதற்காக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தட்டச்சர் கோப்பு பராமரிப்பதற்காக அவ்வாறு குறிப்பிட்டுள்ளார். தற்போது சாட்சி இணை ஆணையர் தனிக்கோப்பு பராமரிப்பதற்காக அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளதாக கூறுகிறார். மதுரை காவல் துணைக் கண்காணிப்பாளர் விசாரிப்பது தொடர்பாக எனக்கு அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. செயல் அலுவலர் தரப்பில் திருக்கோவிலில் சிலைகள் மற்றும் புராதன பொருட்கள் களவாடப்பட்டது தொடர்பாக காவல் துறையில் தனியா புகார் கொடுக்கப்பட்டதா என்றால் அதுப்பற்றி தெரியவில்லை. தினசரி நாளிதழில் அர்த்தநாரீஸ்வரர் சிலை தொடர்பான கட்டுரையை யார் எழுதியது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. காணாமல் போன சிலை தொடர்பாக ஒரு நபர் ஆங்கிலத்தில் ஒரு புத்தகம் வெளியிட்டுள்ளார் என்றால் தெரியவில்லை. தினசரி நாளிதழில் வெளிவந்த கட்டுரையில் உள்ள சங்கதிகளுக்கும் நான் விசாரித்த போது தெரியவந்த சங்கதிகளுகும் முரண்பாடு இருந்தது என்றால் ஞாபகம் இல்லை. மேற்கண்ட புகார் ஆனது காவல் துறை உயர் அதிகாரிகளின் ஆலோசனையின் பேரில் தயாரிக்கப்பட்டு என்பேரில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால் தான் அலுவலல் ரீதியாக பராமரிக்கப்பட்ட கோப்புகள் மற்றும் கடிதங்கள் ஆகியவை பற்றி மறைக்கப்பட்டு மேற்கண்ட புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளின் மீது உண்மைக்கு புறம்பான புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**<u>3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

மேற்கண்ட அர்த்தநாரீஸ்வரர் சிலையானது வழிபாட்டிற்கு உகந்தது அல்ல என்று பல ஆண்டுகளாக அரசமரத்தடியில் ஒதுக்கிவைக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். நான் மேற்கண்ட கோவிலின் சொத்து பதிவேட்டை பார்த்தேனா என்றால்

பார்த்தேன். அந்த சொத்து பதிவேடு எந்த ஆண்டிற்குரியது என்றால் தற்போது ஞாபகம் இல்லை. நான் பார்த்த சொத்து பதிவேடானது யாரால் பராமரிக்கப்பட்டு வந்தது என்றால் செயல் அலுவலரால் பராமரிக்கப்பட்டு வந்தது. மேற்கண்ட சொத்து பதிவேட்டின் பதிவுகள் எந்த ஆண்டில் தொடங்கி எந்த ஆண்டு வரை பராமரிக்கப்பட்டு வந்தது என்றால் கோயிலானது இந்து சமய அறநிலைய துறை கட்டுப்பாட்டிற்கு வந்த நாளிலிருந்து இன்றைய தேதி வரை பராமரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயல் அலுவலரும் பொறுப்பேற்கும் போது என்னென்ன சிலை மற்றும் பொருட்களை முந்தைய செயல் அலுவலரிடமிருந்து பெற்றேன் என்று பொறுப்பு பட்டியலில் பதிவு செய்து கையொப்பமிடவேண்டும் என்றால் சரிதான். என்னை போன்ற அதிகாரிகள் கோயிலில் ஆய்விற்கு செல்லும் போது சொத்து பதிவேட்டில் உள்ள சிலைகள் மற்றும் பொருட்கள் அந்த கோயிலில் உள்ளதா என்று சரிபார்த்து சரிபார்க்கப்பட்டது என்று எழுதி கையொப்பமிடவேண்டும் என்றால் சரிதான். எந்த ஆண்டில் பின்னமான சிலையானது பின்னமாகிவிட்டது என்று அகற்றப்பட்டு அரசமரத்தடியில் வைக்கப்பட்டதென்று எந்த பதிவேட்டிலாவது குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் எந்த ஆவணங்களிலும் குறிப்பிடப்படவில்லை. பின்னமான சிலைகள் தனியாக ஒதுக்கி வைக்கப்பட்டபிறகு அந்த பின்னமான சிலைகள் பற்றிய பதிவு சொத்து பதிவேட்டில் இருக்காது என்றால் சரிதான். பொதுவாக வழக்கு சம்பந்தபட்ட சிலை போன்று பல பின்னமான சிலைகள் தமிழ்நாட்டில் பலக்கோவில்களில் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் செம்பியன் மாதேவி கால சிலை என்று குறிப்பிட்டிருக்கும் பட்சத்தில் செம்பியம் மாதேவி காலம் எது என்றால் 10ம் நூற்றாண்டு ஆகும். இந்த விபரமும் எனக்கு செவி வழி செய்தி என்றால் சரிதான். கல்வெட்டு ஆதாரங்கள் உள்ளது. அந்த கல்வெட்டு ஆதாரங்களை நான் பார்த்தேனா என்றால் இல்லை. கல்வெட்டுகள் உள்ளது. 10ம் நூற்றாண்டு சோழ அரசரின் பெயர் என்ன வென்றால் ஞாபகம் இல்லை. சோழர்கள் காலத்து சிலைகளில் ஒவ்வொரு நூற்றாண்டிற்கும் சிலைகளில் அங்க அடையாளங்கள் மாறுபடும் என்றால் சரிதான். அதன்

அடிப்படையிலும் ஆய்வாளர்கள் சிலைகள் ஆனது எந்த நூற்றாண்டை சேர்ந்தது என்று நிர்ணயிக்கிறார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் சம்பந்தபட்ட அர்த்தநாரீஸ்வரர் சிலையின் உயரத்தை தவிர வேறு எந்த அங்க அடையாளங்கள் குறித்தும் புகார் மற்றும் காவல் துறை விசாரணை வாக்குமூலத்தில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனக்கு தெரிந்தவரை 10ம் நூற்றாண்டு காலத்தில் செய்து வைக்கப்பட்ட சிலை பாறை சிலைகளா அல்லது கிரானைட் சிலைகளா என்றால் பெரும்பாலும் கற்சிலை(கிரானைட்) தான். அ.சா.ஆ. 2ல் காணப்படும் சிலைகள் என்ன வகை சிலை என்றால் கற்சிலை ஆகும். அ.சா.ஆ.2ல் உள்ள 2 புகைப்படங்களில் உள்ள சிலைகளுக்கு இடையே கண்ணுக்கு தெரிந்த வித்தியாசங்கள் உள்ளது என்றாலும் இரண்டும் ஒன்றல்ல என்றாலும் சரியல்ல. நான் முதல் விசாரணையில் அளித்துள்ள சாட்சியம் ஆனது உண்மைக்கு புறம்பானது என்றாலும் காவல் துறையினரின் அறிவுறுத்தலின் பேரில் வழக்கை அனுசரித்து பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

(மேற்கண்ட 4 மற்றும் 3 எதிரிகள் தரப்பிலான குறுக்கு விசாரணை 5 ,6 மற்றும் 10 எதிரிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. )